# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.101/2022

## அ.சா. 3 (LW 3)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திருமதி. பவுன்ராணி,** | **தொழில்** | |
| **க பெயர்** | ரெங்கராஜ் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **11.02.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 2, எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது குஜிலியம்பாறையில் குடியிருந்து வருகிறேன். அ.சா.2. சாந்தி கடையில் நான் வேலை பார்க்கிறேன். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு 2 பேர் இட்லி வாங்க வந்தார்கள். பன்னீர் செல்வமும், ரமேசும் சண்டை போட்டு ஒருவரையொருவர் கழுத்தை பிடித்து தள்ளிக் கொண்டனர். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் அவ்வப்போது எங்கள் கடைக்கு வந்து வியாபாரம் நிமித்தமாக உன்கடையில் மட்டும் வியாபாரம் நடக்கிறது, எங்கள் கடையில் வியாபாரம் நடக்கவில்லை என அசிங்கமாக பேசி சண்டையிடுவார்கள். சம்பவ நாளன்று 06.05.2021 அன்று சுமார் 07.00மணி நான், சாந்தி, அங்காளபரமேஸ்வரி ஆகியோர்கள் கடையின் உள்ளே இருந்தோம். சுமார் 07.00மணி சமயத்தில் ஆஜர் எதிரிகள் இருவரும் பன்னீர்செல்வத்தை சுவற்றில் மோதியதை நான் பார்த்தேன். ஆஜர் எதிரிகள் இருவரும் கடையிலிருந்த கடப்பாகல், சேரை உடைத்து விட்டார்கள். நாங்கள் எதுவும் பேசவில்லை. இறந்தவருக்கு சுவற்றில் மோதியதில் காதிலும், மூக்கிலும் காயம்பட்டது. சுவற்றின் பின்னால் வைத்து மோதினார்கள். யார், யார் மோதி சண்டையிட்டார்கள் என தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. மறுநாள் காலை 07.15மணி அளவில் போலிசார் வந்து சம்பவ இடத்தை படம் வரைந்தார்கள். என்னை விசாரித்தார்கள். அதில் நானும் குமாரும் கையெழுத்திட்டோம். என் முன்னிலையில் தரையிலிருந்து இரத்தம் பட்டகாரை, இரத்தம்படாத காரையையும் போலிசார் எடுத்தார்கள். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியிலுள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். **அது அ.த.சா.ஆ.2. ஆகும்.** _இரத்தம் பட்டகாரை **சா.பொ.1. ஆகும்.** இரத்தம்படாத காரை **சா.பொ.2. ஆகும்.**

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

ரமேசுக்கும், பன்னீர்செல்வத்திற்கும் இடையே 1/2 மணி நேரம் சண்டை நடந்தது. ஒருவரையொருவர் கழுத்தை பிடித்து தள்ளி சண்டையிட்டனர். அதன்பின்பு

அவர்களை சார்ந்தவர்கள் 10 பேர்கள் வந்து அவர்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டனர். அந்தசண்டையில் யார், யாரை தள்ளி யாருக்கு காயம்பட்டது என்று எனக்கு தெரியாது. அவர்களுக்குள் சண்டை நடக்கும் போது ஆஜர் எதிரிகள் அங்கு வரவில்லை. எங்கள் கடைக்கு முன்பாக ஆஸ்பெஸ்ட்டாஸ் சீட் போடப்பட்டுள்ளது. ஆஸ்பெஸ்ட்டாஸ்க்கும், கடைக்கும் இடையே கிரில் போடப்பட்டுள்ளது. அந்த கிரிலுக்கு உள்பக்கந்தான் சுவர் உள்ளது. ஆஸ்பெஸ்ட்டாஸ்க்கு முன்பு தென்னங்கீற்றில் பந்தல் போடப்பட்டுள்ளது. அந்த பகுதியிலும் சுவர் இல்லை. நான் கையெழுத்திட்ட பேப்பரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார் கேட்டுக் கொண்டதற்காக கையெழுத்து போட்டேன்.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.11 19:03:35 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.